தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி முதல்வர் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மனு

விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, ஆக.27: தங்களுக்கு எதிரான தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி தமிழக முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

சட்டப்பேரவைத் தேர்தலில் முதல்வர் விஜய் பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதிகளில் வெற்றி பெற்றார். இதில், முதல்வர் விஜய் பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகர் மற்றும் அத்தொகுதி வாக்காளர்களான தினேஷ் மற்றும் லட்சுமி நரசிம்மன் ஆகியோர் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இதேபோல், திருச்சி கிழக்கு தொகுதியில் முதல்வர் விஜய்யின் வெற்றியை எதிர்த்து அங்கு திமுக சார்பில் போட்டியிட்ட இனிகோ இருதயராஜ் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்குகள் கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, வழக்கை நிராகரிக்கக் கோரி மனு தாக்கல் செய்ய முதல்வர் விஜய் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தரப்பில் அவகாசம் கோரப்பட்டது. இதை ஏற்க மறுத்த உயர்நீதிமன்றம், ஆக. 27-ஆம் தேதிக்குள் மனு தாக்கல் செய்யாவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்த வழக்குகள் நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது, தங்களுக்கு எதிரான தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி முதல்வர் விஜய் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தரப்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, முதல்வர் விஜய்யின் வெற்றிக்கு எதிராக பெரம்பூரைச் சேர்ந்த வாக்காளர் தினேஷ் மற்றும் வில்லிவாக்கம் தொகுதியில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வெற்றிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணையை வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார். அதேபோல், திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜ் தாக்கல் செய்த வழக்கு மற்றும் விஜய்யின் வெற்றியை எதிர்த்து பெரம்பூர் தொகுதி வாக்காளர் லட்சுமி நரசிம்மன் ஆகியோர் தொடர்ந்த வழக்குகளை வரும் ஆக.31-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

மனுவில் கூறியது என்ன?: தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி முதல்வர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:

தேர்தல் ஆணைய விதிகளையோ, நடத்தை விதிகளையோ மீறுவது அந்த தேர்தலையே ரத்து செய்வதற்கான முகாந்திரம் அளிக்காது. எனது வெற்றியை எதிர்த்து மனு தாக்கல் செய்துள்ளவர்கள், தேர்தல் நடத்தை விதிகளை மீறியதற்கும் எனது வெற்றிக்கும் இடையேயான காரணங்களையோ தொடர்பையோ ஆதாரங்களுடன் நிரூபிக்கவில்லை.

அந்த மனுக்களில், நடத்தை விதிகளை மீறியதால் எனக்கு கூடுதல் வாக்கு கிடைத்தது என்பதற்கோ, அது தேர்தல் முடிவுகளையே மாற்றியது என்பதற்கோ எந்த ஆதாரத்தையும் குறிப்பிடவில்லை. தேர்தல் பிரசாரத்தில் குழந்தைகளைப் பயன்படுத்தியதாகக் கூறி, ஒருவரது தேர்தல் வெற்றியைச் செல்லாது என அறிவிக்க முடியாது. குழந்தைகளைப் பிரசாரத்தில் பயன்படுத்தியது வாக்காளர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி, அது தேர்தல் முடிவுகளைப் பாதித்ததாக கூறுவது ஊகத்தின் அடிப்படையிலான குற்றச்சாட்டு. அதேபோன்று மதத்தை முன்னிறுத்தி நான் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், அப்போது நான் என்ன வார்த்தையை, வாக்கியத்தைப் பயன்படுத்தினேன் என்பதை மனுதாரர்கள் தெளிவுபடுத்தவில்லை எனக் கூறியுள்ளார்.

விவேகானந்த கேந்திர தலைவர் மறைவு

கன்னியாகுமரி, ஆக. 27: அகில இந்திய விவேகானந்த கேந்திர தலைவர் ஏ. பாலகிருஷ்ணன் புதன்கிழமை இரவு காலமானார்.

ஏ. பாலகிருஷ்ணன்

விவேகானந்த கேந்திர தலைவர் ஏ. பாலகிருஷ்ணன் (88), கேரள மாநிலம், பாலக்காட்டைச் சேர்ந்தவர். இவர் கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவால் நாகர்கோவிலில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், புதன்கிழமை இரவு காலமானார்.

1981 முதல் 2001ஆம் ஆண்டு வரை அகில இந்திய விவேகானந்த கேந்திர பொதுச் செயலராகவும், 2001 முதல் 2020 வரை துணைத் தலைவராகவும், 2020 முதல் தலைவராகவும் பணியாற்றி வந்தார். அருணாச்சலப் பிரதேசத்திலும் விவேகானந்த கேந்திரத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தார்.

விவேகானந்த கேந்திர நிறுவனர் ஏக்நாத்ஜி ரானடேவிடம் பயிற்சி பெற்ற இவர், விவேகானந்தரின் லட்சியங்களுக்காக வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துள்ளார். இவரது இறுதிச் சடங்கு சனிக்கிழமை (ஆக. 29) பிற்பகல் கன்னியாகுமரி விவேகானந்த கேந்திர வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதமர், ஆளுநர் இரங்கல்: கேந்திர தலைவர் ஏ. பாலகிருஷ்ணன் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழக ஆளுநர் விஸ்வநாத் ஆர்லேகர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சுவாதீன அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (54/2002) இன் கீழ் (மேற்படி 'சட்டம்') இங்கு காணும் **Arcil-Trust-2026-007' ("Arcil")**-ன் டிரஸ்டி என்ற அளவில் செயல்படும் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்-ன் கீழே கையொப்பமிட்டுள்ளவர் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிற படியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் (மேற்படி 'விதிகள்') தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன் எண் **FEDPKKSTL0510637** தொடர்பாக- கடன்தாரர்கள் : **கஸ்தூரி S, நடராஜன் சிவகுமார்** ஜாமீன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்) அவர்களுக்கு **15/09/2025** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி அது கிடைத்த 60 நாட்களுக்குள் அதில் காணும் **13.08.2025** அன்றுள்ளபடியான கடன் பாக்கி **ரூ.7,87,065.03/- (ரூபாய் ஏழு லட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுபத்தைந்து மற்றும் மூன்று பைசா மட்டும்)** மற்றும் **14.08.2025** முதல் தொகை வசூலிக்கப்படும் /செலுத்தப்படும் வரை ஒப்பந்த விகிதத்தில் அமைந்த வட்டி சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13 உட்பிரிவு (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகளை **26 ஆகஸ்ட் 2026** அன்று இங்கு கையொப்பமிட்டுள்ளவர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ/நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது, ARCIL-க்குச் செலுத்தவேண்டிய **02.07.2026** தேதியில் உள்ளபடியான கடன் பாக்கி **ரூ.9,50,163.9/- (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரத்து நூற்று அறுபத்து மூன்று மற்றும் தொண்ணூறு பைசா மட்டும்)** மற்றும் **03.07.2026** முதல் தொகை வசூலிக்கப்படும் / செலுத்தப்படும் வரை ஒப்பந்த விகிதத்தில் அமைந்த வட்டி, எதிர்பாரா செலவுகள், செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்து முழுவதுமாக செலுத்தவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8)-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடனுக்கு ஈடான சொத்து விவரம்

சொத்து விவரம் :
புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், குளத்தூர் சார்-பதிவாளர் அலுவலகம், குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், வாதனகுறிச்சி ஊராட்சி, வாதனகுறிச்சி கிராமம், பட்டா எண் 13, சர்வே எண் 134/12b, வகைப்பாடு: நத்தம், பரப்பளவு 0.02.0 ஏர்ஸ் இது 201 சதுர மீட்டர் அல்லது 2164 சதுர அடிக்குச் சமம், எல்லைகள் பின்வருமாறு:- **வடக்கு**: பிரமன் வீடு, **தெற்கு**: மொலையன் சொத்து, **கிழக்கு**: நத்தம் பாதை, **மேற்கு**: மொலையன் சொத்து.

ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட்.-க்காக
(Trustee of Arcil-Trust-2026-007)

இடம்: தமிழ்நாடு
நாள்: 26.08.2026

அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.
CIN No.: U65999MH2002PLC134884, வலைதளம் - www.arcil.co.in
பதிவு அலுவலகம் : தி ரூபி, 10ஆவது தளம், 29 சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை-400 028. **தொலைபேசி எண்.** 022-66581300

வாக்குப்பதிவில் 'ஏ.ஐ', இணைய வசதிகளைச் செயல்படுத்த முடியாது

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார்

சென்னை, ஆக. 27: தேர்தல் வாக்குப் பதிவில் 'ஏ.ஐ.' தொழில்நுட்பம், இணைய வசதிகளைப் பயன்படுத்த முடியாது என இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

சென்னை கலைவாணர் அரங்கில் தமிழகம், புதுச்சேரி மாநில தேர்தல் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடனான கலந்துரையாடல் மற்றும் தேர்தல் தொடர்பான செயல்பாட்டு அரங்கக் காட்சிகள் வியாழக்கிழமை நடைபெற்றன.

இதில், தமிழகம்-புதுச்சேரியில் பள்ளி, கல்லூரிகளில் உள்ள தேர்தல் கல்வி மன்றத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதிலளித்துப் பேசியதாவது:

தற்போதைய மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் வாக்குகளைப் பதிவு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வெளிப்படைத் தன்மையுடன் வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிக்க 'ஏ.ஐ.' தொழில்நுட்பம், இணையதள வசதி மற்றும் கைப்பேசி வழி வாக்குப்பதிவு முறைகளைச் செயல்படுத்த முடியாது. பயோமெட்ரிக் முறையில் வாக்களிக்கும் முறையை செயல்படுத்துவதிலும் நடைமுறை சிக்கல்கள் உள்ளன. எதிர்காலத்தில் தேவைப்பட்டால் அதைச் செயல்படுத்த பரிசீலிக்கலாம். சமூக வலைதளங்களைத் தேர்தல் ஆணையம் எந்த வகையில் பயன்படுத்த வேண்டும் என ஆலோசிக்கலாம். தேர்தல் ஆணையம் வெளிப்படையான செயல்பாடுகளை இயற்கையாகவே கொண்டுள்ளது.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் வியாழக்கிழமை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் கலந்துரையாடிய இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார். உடன் தமிழக தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்.

உச்சநீதிமன்றத்தில் 41 வழக்குகள்: நாட்டில் கடந்த 1996-ஆம் ஆண்டு முதல் தேர்தலில் வாக்குப்பதிவுக்கு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், தொடக்கம் முதல் தற்போது வரை வாக்குப் பதிவு இயந்திரங்கள் மீதான புகார்கள் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் 41 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. தேர்தலின்போது, வேட்பாளர்கள் தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்யும் சொத்து உள்ளிட்டவற்றின் ஆவணங்கள் சட்டபூர்வமானவை. அவற்றில் தவறிருந்தால் சட்டரீதியாகவே நடவடிக்கை மேற்கொள்ள முடியும். தேர்தல் ஆணையமே நேரடியாக சரிபார்த்து நடவடிக்கை மேற்கொள்ள முடியாது. வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிப்பதால் மட்டுமே வாக்குப் பதிவு சதவீதம் அதிகரிக்கும் என்பது சரியல்ல என்றார்.

முதல்முறையாக இடைவேளை இன்றி 9.43 மணி நேரம் நடந்த பேரவை

சென்னை, ஆக. 27: தமிழக வரலாற்றில் முதல்முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை (ஆக. 25) எவ்வித இடைவேளையும் இன்றி, சட்டப்பேரவை நடவடிக்கைகள் அதிகபட்சமாக 9.43 மணி நேரம் நடைபெற்றுள்ளதாக பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் தெரிவித்தார்.

தமிழகத்தில் புதிதாக அமைந்துள்ள தவெக அரசின் முதல் நிதிநிலை அறிக்கை கடந்த ஆக. 6-ஆம் தேதி சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து, மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது வருகிறது. அந்த வகையில், வியாழக்கிழமை நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் பேசியதாவது: தமிழக வரலாற்றில் முதல்முறையாக கடந்த ஆக. 25-ஆம் தேதி அதிகபட்ச நேரமாக 9 மணி 43 நிமிஷங்கள் எவ்வித இடைவேளையும் இன்றி, பேரவை நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளன. இதற்கு முந்தைய காலங்களில், இதைவிட கூடுதல் நேரம் பேரவை நடைபெற்றிருந்தாலும், பேரவை நடவடிக்கைகளுக்கு இடையே இடைவேளைகள் விடப்பட்டுள்ளன. ஆனால், ஆக. 25-ஆம் தேதி எவ்வித இடைவேளைகளும் விடப்படாமல், அதிகபட்ச நேரம் பேரவை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றது என்று அவர் தெரிவித்தார்.

பைக் மீது லாரி மோதல்: 3 இளைஞர்கள் உயிரிழப்பு

சிதம்பரம், ஆக.27: கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு அருகே வியாழக்கிழமை இரவு பைக் மீது லாரி மோதியதில் 3 இளைஞர்கள் உயிரிழந்தனர். சேத்தியாத்தோப்பு அருகே காவாலக்குடி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சுபக்கண்ணன் (19), வினோத் (18), சூர்யா (18). இவர்கள் மூவரும் வியாழக்கிழமை வேலைக்குச் சென்றுவிட்டு இரவு ஒரே பைக்கில் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். ஆணைவாரி அருகே சென்றபோது, வடலூர் நோக்கி வந்த லாரி, பைக் மீது மோதியது. இதில் சுபக்கண்ணன், வினோத், சூர்யா ஆகிய மூவரும் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். தகவலறிந்து சென்ற சேத்தியாத்தோப்பு போலீஸார் சடலங்களையும் மீட்டு, உடற்கூறாய்வுக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரிக்கின்றனர்.

ஆணவப்படுகொலை தடுக்க விரைவில் சிறப்பு சட்டம்

சென்னை, ஆக.27: பொதுமக்கள், அரசியல் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசித்து ஓய்வு பெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையிலான குழுவின் பரிந்துரை கிடைத்தவுடன் ஆணவப் படுகொலைகளைத் தடுக்க சிறப்பு சட்டம் இயற்றப்படும் என்று சமூகநலத் துறை அமைச்சர் வன்னி அரசு தெரிவித்தார்.

இதுதொடர்பாக சட்டப்பேரவையில் வியாழக்கிழமை திமுக உறுப்பினர் செந்தில் செல்வன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் வன்னி அரசு, ஜாதிய எண்ணத்தில் தனது சொந்த குழந்தைகளை ஆணவப் படுகொலை செய்யும் செயல் சமுகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதைத் தடுக்க முந்தைய அரசு ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் அமைக்கப்பட்ட குழு, அரசியல் பிரதிநிதிகள் பொதுமக்களிடம் கருத்துகள் கேட்டு அறிக்கை சமர்ப்பிக்க 9 மாதம் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரை கிடைத்தவுடன் ஆணவப் படுகொலைகளைத் தடுக்க சிறப்பு சட்டம் இயற்றப்படும் என்றார்.

குதிரை பேர வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை நீட்டிப்பு

சென்னை, ஆக. 27: தவெக எம்எல்ஏவிடம் குதிரை பேரம் நடத்தியதாக திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை இரண்டு வாரங்களுக்கு நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சட்டப்பேரவையில் பேரவைத் தலைவருக்கு எதிராக கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க ரூ.35 கோடி கொடுப்பதாக பேரம் பேசியதாக, ஊத்தங்கரை தொகுதி தவெக எம்எல்ஏ இளையராஜா சென்னை காவல் ஆணையரிடம் புகார் அளித்திருந்தார். இதன் அடிப்படையில், சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த யூடியூபர் திருநாவுக்கரசு, திருச்சியைச் சேர்ந்த நரேஷ், சென்னை மேடவாக்கத்தைச் சேர்ந்த தியாகராஜன் உள்ளிட்ட 14 பேர் மீது திருவல்லிக்கேணி போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கில் கைதாகி பிணை பெற்ற சேதுராஜ், கார்த்திக், ரமேஷ் ஆகியோர் சிபிஐ விசாரணைக்கு மாற்றக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், குதிரை பேரம் தொடர்பாக திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் ஒட்டுமொத்த விசாரணைக்கும் தடை விதித்து உத்தரவிட்டது. இதேபோன்று, டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக ஒப்பந்ததாரர் ரமேஷ் என்பவர் மீதான வழக்கு விசாரணைக்கு மட்டும் இடைக்காலத் தடை விதித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த இரண்டு வழக்குகளும் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது அரசுத் தரப்பில், இந்த இரு வழக்குகளிலும் விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த வழக்குகளின் விசாரணையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர். அதுவரை இந்த வழக்குகளில் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீட்டித்து உத்தரவிட்டனர்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மனித வள மேலாண்மை துறை
www.iob.bank.in மத்திய அலுவலகம், 763, அண்ணா சாலை, சென்னை - 600002

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிக்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது:

ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) அழைப்பு அறிவிப்பு

அரசு மின்னணு சந்தை (GeM) தளம் – கருத்துருக் கோரிக்கை (RFP) இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மருந்தக (Dispensary) சேவைகளுக்காக, புகழ்பெற்ற மருத்துவமனைகளிடமிருந்து இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு மருத்துவர், செவிலியர் மற்றும் மருந்தாளர் சேவைகளை வழங்குவதற்கான கருத்துருக் கோரிக்கை (RFP).

ஒப்பந்தப்புள்ளி எண்: GEM/2026/B/7961876 தேதி : 25.08.2026

மேற்கண்ட GeM ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தை **www.iob.bank.in** மற்றும் **www.gem.gov.in** ஆகிய இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விவரங்கள் மற்றும் அதில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின், அவற்றை அறிந்து கொள்ள **www.gem.gov.in** இணையதளத்தை தொடர்ந்து பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.

கார்ப்பொரேட் அலுவலகம்: அலுவலக எண்கள் 501 & 503, 5-வது தளம், லைட் பிரிட்ஜ், சகி விஹார் சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை புறநகர் (மாவட்டம்) மகாராஷ்டிரா-400 072. **கரூர் கிளை:** க.எண்.10/1, மனை எண்.27, V.K டவர், வையாபுரி நகர் 4வது குறுக்கு , SF. எண். 605, EB அலுவலகம் அருகில், கரூர்- 639002, தமிழ்நாடு.

E-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான e-ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்டுள்ள, அடமானத்தில் உள்ள அசையாச் சொத்தானது **ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்** நிறுவனத்தின் **கரூர் கிளை**யைச் சேர்ந்த அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ள நிலையில் அது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படைகளிலும் தெரிந்த வரையில் வில்லங்கம் ஏதும் இல்லை எனும் நிலையிலும் விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	கடன்தாரர்(கள்) / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்புத் தேதி & தொகை	அசையாச் சொத்து விவரம்	ரிசர்வ் விலை (RP)	டேவணித் தொகை (EMD)	சுவாதீன வகை
1.	**(கடன் குறியீடு எண்.28210000315 கரூர் கிளை) காளிமுத்து A** (கடன்தாரர்) **சித்ரா காளிமுத்து** (இணை கடன்தாரர்)	**10-ஜூன்-24 ரூ.15,28,521/-**	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும் அமைவிடம் கரூர் மாவட்டம், கரூர் பதிவு மாவட்டம், தாரம்பட்டி சார்-பதிவு மாவட்டம், கடவூர் வட்டம், வரவணி கிராமம், குபேரன் நகர், மனை எண் 114, சர்வே எண் 313/1B பரப்பளவு 1200 சதுர அடி (111.48 சதுர மீட்டர்) நிலம், அதிலுள்ள கட்டிடம் மற்றும் சொத்துடன் இணைந்த அனைத்து சாதனங்கள், **எல்லைகள்: கிழக்கு**: மனை எண் 113, **மேற்கு**: மனை எண் 115, **வடக்கு**: மனை எண் 107, **தெற்கு**: மனை எண் 107.	**ரூ.14,44,296.00** (ரூபாய் பதினான்கு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று தொண்ணூற்றாறு மட்டும்)	**ரூ.1,44,430.00** (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நானூற்று முப்பது மட்டும்)	**நேரடி**

1. வாடிக்கையாளர் விவர (KYC) ஆவணத்துடன் கூடிய டேவணித் தொகைக்கான (EMD) கேட்பு வரைவோலையையும் (DD) ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தையும் (ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள்) மேற்குறிப்பிட்ட கிளை அலுவலக முகவரியில் தாக்கல் செய்ய அல்லது **https://bankeauctions.com** இணையத்தளத்தில் பதிவேற்றக் கடைசி நாள் **01-அக்டோபர்-26** அன்று மாலை 05:00 மணி. கடைசி நாளுக்குப் பின்னர் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் செல்லத்தகாத ஒப்பந்தப்புள்ளிகளாகக் கருதப்பட்டு தள்ளுபடி செய்யப்படும். டேவணித் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது. **2.** சொத்துக்கான ஒப்பந்தப்புள்ளிகள் / விலைகோரல்கள் **02-அக்டோபர்-26 அன்று (ஏல நாள்) பிற்பகல் 03:00-4.00 மணிக்கு https://bankeauctions.com** இணையத்தளத்தில் திறக்கப்படும். **3**. மேற்குறிப்பிட்ட சொத்தின் பேரில் உள்ள எந்த ஒரு பொறுப்புக்கூறலுக்கும் AHFL பொறுப்பேற்காது. குறிப்பிட்ட சொத்து **'உள்ளது உள்ள இடத்தில்', 'உள்ளது உள்ளபடி' மற்றும் 'உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்'** எனும் அடிப்படையிலேயே ஏலம் விடப்படும். **4.** கேட்பு வரைவோலை (D.D) 'Aadhar Housing Finance Limited' எனும் பெயருக்கு மட்டுமே எடுக்கப்பட வேண்டும். **5.** ஏலம் / ஏலக்கோரல் **https://bankeauctions.com** இணையத்தளத்தின் வாயிலாக "இணைய வழி மின்னணு ஏலக்கோரல்" முறையில் மட்டுமே நடைபெறும். E-ஏல விற்பனை நடைமுறையில் கலந்து கொள்ளும் முன்பு விரிவான விதிமுறைகளை அறிய மேற்படி இணையத்தளத்துக்கு வருகைபுரியுமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். **6.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் M/s. C1 இந்தியா பிரைவேட் லிட்., நிறுவனத்தின் இணையத்தளத்தில் உள்ள **https://bankeauctions.com/registration/signup** எனும் இணைப்புக்குச் சென்று தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு தங்களுக்கென இலவசமாக வழங்கப்படும் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பெற்றுக் கொள்ள வேண்டும். விருப்பமுள்ள ஏலதாரர்களுக்கு M/s. C1 இந்தியா பிரைவேட் லிட்., எனும் சேவை நிறுவனத்தின் **https://bankeauctions.com** இணையத்தளத்தின் மூலம் e-ஏலம் குறித்த இணைய வழிப் பயிற்சி வழங்கப்படும். **7.** மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டியவர்:அதிகாரப்பூர்வ அலுவலர், ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட், **அறிவுச்செல்வம் S (தொடர்பு எண்: 9600599885)** அல்லது M/s. C1 இந்தியா பிரைவேட் லிட்., எனும் சேவை நிறுவனம், **திரு. பிரபாகரன் (தொடர்பு எண்: +91 7418281709), மின்னஞ்சல்: tn@c1india.com & support@bankeauctions.com கைப்பேசி: +917291981124 / 25 / 26.** நாளிதுவரையில் மேற்கண்ட அசையாச் சொத்தினை / கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்யவோ தள்ளி வைக்கவோ மற்றும் / அல்லது அப்புறப்படுத்தவோ AHFL நிறுவனத்துக்கு / AHFL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு எதிராகத் தடை உத்தரவு மற்றும் / அல்லது நீதிமன்றத் தடையாணை ஏதும் இல்லை. **8.** விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் (AHFL) நிறுவனத்தின் www.aadharhousing.com இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள். **9.** ஏல உயர்வுத் தொகை ரூ.10,000/-. **10.** இந்த செய்தித்தாள் வெளியீடு மற்றும் இதில் உள்ள தரவுகள் பொது மக்களிடையே பரப்புவதற்காகவே. இந்த உள்ளடக்கத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, எந்த வடிவத்திலோ அல்லது எந்த வகையிலோ, அச்சு, டிஜிட்டல், மின்னணு வெளியீடு, மின்னஞ்சல் அல்லது வலை வெளியீடுகள் அல்லது வேறு எந்த முறையிலும் மறுஉருவாக்கம் செய்தல், விநியோகித்தல், பரிமாற்றம் செய்தல் அல்லது மறுபதிப்பு செய்தல் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உள்ளடக்கத்தை எந்த முறையிலும் அங்கீகரிக்கப்படாத முறையில் பயன்படுத்தினால் AHFL தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடும்.

இடம்:கரூர்
நாள்: 28.08.2026

ஒம்/- அதிகாரபூர்வ அலுவலர்,
ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.

பதிவு அலுவலகம் : ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் - 09. மண்டல அலுவலகம்: தரை தளம், ஜெனித் ஹவுஸ், கேசவ்ராவ் காத்யே மார்க், ரேஸ் கோர்ஸ் எதிரில், மகாலட்சுமி, மும்பை- 34. தொலைபேசி: 022-39586300.
அதிகாரபூர்வ அலுவலர்: M/s.HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.,
எண்.36/71, முதல் தளம், சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி, தமிழ்நாடு-620 003

ஏல விற்பனை அறிவிப்பு டெண்டருடன் E-ஏலம்
(கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர்/ பொதுமக்களுக்கு) SARFAESI சட்டம்-2002, விதி 8(6) R/w விதி 9(1)-ன் கீழ்

கீழே கையொப்பமிட்டுள்ளவரான **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்** -ன் அதிகாரபூர்வ அலுவலர் அவர்கள், இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்கில் கடனுக்கு ஈடாக உள்ள சொத்துகளை **'உள்ள இடத்தில் உள்ளவாறு' & 'உள்ளது உள்ளவாறு'** எனும் அடிப்படையில் விற்கும் உரிமையுடன் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் தமது சுவாதீனத்தில் (Possession) எடுத்துக்கொண்டார்.

விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் & முகவரி: 1.தங்கம் இண்டஸ்ட்ரியல் ஓர்க்ஸ், எண்.146, வடக்குத் தெரு, சுவாமிமலை, கும்பகோணம் HO -612001. **மேலும்: 2. தங்கம் N.**எண்.144-10, வடக்கு தெரு, சுவாமிமலை, கும்பகோணம் HO -612001. **3. செந்தில்குமார் நடராஜன்,** எண் 144-10, வடக்கு தெரு, சுவாமிமலை, கும்பகோணம் HO -612001.**4. நடராஜன் G,** எண் 144-10, வடக்கு தெரு, சுவாமிமலை, கும்பகோணம் HO-612001.5. பிரசன்னா ராமதாஸ், எண்.73, தங்க விலாஸ் நகர், காந்தி நகர் கிழக்கு, கும்பகோணம் கும்பகோணம் HO-612001. **2. கணக்கு எண்:3991986, 3.மொத்த நிலுவைத் தொகை: கடன் கணக்கு எண்:3991986-க்கு ரூ.70,52,757.65 (ரூபாய் எழுபது லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தேழு மற்றும் அறுபத்தைந்து பைசா மட்டும்)** 21 ஆகஸ்ட் 2026 அன்றுள்ளபடி, மற்றும் அது முழுமையாகச் செலுத்தப்படும் வரை கணக்கிடப்படும் வட்டி/ தற்செயலான செலவுகளுடன்.
கடன் வழங்கிய நிறுவனத்திற்கு தெரிந்தவரையில் வில்லங்கம்-NIL
அசையாச் சொத்துக்களின் விவரங்கள்: சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், அமைவிடம் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பதிவு மாவட்டம், சுவாமிமலை துணை பதிவு மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை டவுன் பஞ்சாயத்து & கிராமம், தெற்கு வடக்கு ராஜவீதி, மேற்கு பகுதி, **http:// R.S.No.156/1,** நத்தம் நிலவரித்திட்டா புதிய எண்.241/19,அளவீடு :கிழக்கிலிருந்து மேற்கு தெற்கு 56 அடி, வடக்கு 62 அடி, தெற்கிலிருந்து வடக்கு கிழக்கு 70 அடி, மேற்கு 78 அடி, மொத்த பரப்பளவு 406.61 சதுர.மீட்டர்.எல்லைகள் :வடக்கு சரவணப்பொய்கை குளம், தெற்கு வடக்கு வீதி & நடராஜன் காலி மனை, கிழக்கு தெற்கு வடக்கு ராஜவீதி & கண்ணையா நாயுடு வீட்டுக் கொல்லைப்புறம், மேற்கு சாமிநாதன் நாயுடு வீட்டுக் கொல்லைப்புறம்.
2. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பதிவு மாவட்டம், சுவாமிமலை துணைப் பதிவு மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை டவுன் பஞ்சாயத்து & கிராமம், தெற்கு வடக்கு ராஜவீதி, மேற்குப் பகுதி, R.S.எண் 156/1, நத்தம் நிலவரித்திட்டா புதிய எண்.241/19 பரப்பளவு 22.30 சதுர மீட்டர் (240 சதுர அடி) **எல்லைகள்:** வடக்கு குலாமைதீன் ராவுத்தர் அமீர்தீன் ராவுத்தர் தென்னத்தோப்பு, தெற்கு வடக்கு வீதி, கிழக்கு சுவாமிமலை கிழக்கு வீதி சோழபுரம் செட்டியார் பொதுவான கடை, மேற்கு நடராஜன் கடை,**2.** R.S எண்.156/1, நத்தம் நிலவரித்திட்டா புதிய எண்.241/19, பரப்பளவு 22.30 சதுர மீட்டர் (240 சதுர அடி) **எல்லைகள்:** வடக்கு அமீர்தீன் ராவுத்தர் தென்னத்தோப்பு, தெற்கு: வடக்கு வீதி, கிழக்கு சுவாமிமலை கிழக்கு வீதி சோழபுரம் செட்டியார் பொதுவான கடை, மேற்கு கோவிந்தசாமி படையாச்சி கடை

ரிசர்வ் விலை	EMD தொகை	ஏல உயர்வு தொகை	ஏல தேதி மற்றும் நேரம்	EMD செலுத்த கடைசி தேதி & நேரம்
ரூ.1,99,33,300/-	ரூ.19,93,330/-	ரூ.1,00,000/-	29.09.2026, காலை 11.00 மணி முதல் பகல் 12:00 மணி வரை. (தலா 5 நிமிடங்கள் வீதம் வரம்பற்ற நீட்டிப்புடன்)	28.09.2026 மாலை 05:00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. ஏல விற்பனையானது **'இணைய வழி e-ஏல'** முறையில் **https://bankeauctions.com** இணையத்தளத்தில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள்களில் எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடக் கால நீட்டிப்பு வசதியுடன் நடைபெறும். **2.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் **https://bankeauctions.com** இணையத் தளத்தில் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி டேவணித்தொகையைச் செலுத்தலாம் **https://bankeauctions.com** இணையத்தளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையைக் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% எனும் அளவில் **"HDB Financial Service Limited"** எனும் பெயரிலான செலுத்தாணை (Order) / கேட்பு வரைவோலை (DD) வடிவில் செலுத்த வேண்டும். இணையத் தளத்தில் தன்னைப் பதிவு (ஒருமுறை) செய்து கொண்ட பின்பு ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் ஏல ஆவணத்தைத் தாக்கல் செய்தவற்கான கடைசி நாளுக்கும் நேரத்துக்கும் முன்னதாகப் பின்வரும் ஆவண நகல்களை இணையத் தளத்தில் பதிவேற்ற வேண்டும். அவையாவன: i) NEFT/RTGS செலுத்துச்சீட்டு நகல் அல்லது கேட்பு வரைவோலை', ii) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல், iii) அடையாளச் சான்று / முகவரிச் சான்று [வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் (KYC) எனும் வகையில்] அஃதாவது சுயசான்றொப்பம் செய்யப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல் / ஓட்டுநர் உரிம நகல் / கடவுச்சீட்டு நகல். இவை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். இவை தவிர, பின்னிணைப்பு-II & III ஆகியவற்றின் (இவற்றை **https://bankeauctions.com** இணையத் தளத்தில் தரவிறக்கிக் கொள்ளலாம்) ஒளிவருடல் நகல்களை (scanned copies) முறையாக நிரப்பிக் கையொப்பமிட்டுப் பதிவேற்றுவதும்கூட அவசியமாகும். பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றுதல், ஏலப்புள்ளி ஆவணங்களைத் தாக்கல் செய்தல் போன்றவற்றுக்கு உதவி தேவைப்படுகிற மற்றும் இணைய வழி உள் ஏலக்கோரலுக்கான பயிற்சி / செய்முறை விளக்கம் தேவைப்படுகிற ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **C1 INDIA PRIVATE LIMITED, ப்ளாட் எண். 68, 3 வது தளம், செக்டார் - 44, குர்கான், ஹரியாணா - 122 003 மின்னஞ்சல் - support@bankeauctions.com, தொடர்பு நபர் பெயர்/ மின்னஞ்சல் முகவரி/ தொடர்பு எண்: 1.தரணி கிருஷ்ணா / andhra@c1india.com, தொலைபேசி:9948182222, 3.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலத்துக்கு நேரிடையாக வந்து தாங்களே தனிப்பட்ட முறையில் கலந்து கொள்வதோடு தாங்கள் தங்களுக்காகத்தான் ஏலத்தில் கலந்து கொள்வதாக எழுத்துப்பூர்வமாக பிரகடன அறிக்கை (declaration) தர வேண்டும். தன்/ அவர் சார்பாக அதிகாரப்பூர்வ நபரை அனுப்பி வைப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. **4.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தைப் பெற அணுக வேண்டியவர்: மேலாளர் : **M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., 36/71, சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி -620003, தமிழ்நாடு**. **5.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தை மட்டும் நிரப்பி உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு **அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** என முகவரியிட்டு குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையை **"HDB Financial Service Limited"** என்ற பெயரில் எடுக்கப்பட்ட செலுத்து ஆணை (PO) / கேட்பு வரைவோலை (DD) இணைத்து **28.09.2026 அன்று மாலை 05.00 மணிக்கோ** அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்க வேண்டும். **6.** சொத்து ஆய்வு மற்றும் இதர விவரங்களுக்கு ஆர்வமுள்ள ஏலதாரர் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: **M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., 36/71, சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி -620003 , அதிகாரப்பூர்வ அலுவலர்: J.கவிப்ரியா - 7904382718, திரு.ரஞ்சித் -9952535434. 7.** சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி"** எனும் நிபந்தனைகள் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **8.** இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்கான, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் **29.09.2026 அன்று முற்பகல் 11:00 மணிக்குத்** திறக்கப்படும். பொதுவாக ஏலமானது மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக நடைபெறும் என்றாலும்கூட, மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகையை விடக் கூடுதலாக ஏலம் கோர விரும்பும் ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கிடையே அதிகாரப்பூர்வ அலுவலர் தனது விருப்புரிமையின் பேரில் வெளிப்படையான ஏலத்தை நடத்தக்கூடும். அப்படி நடந்தால் அந்த நேரத்தில் உச்சபட்சத் தொகைக்கு ஏலம் கோருபவருக்கே விற்பனை முடிவு செய்யப்பெறும். எப்படி இருந்தாலும் விற்பனையானது **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெடின்** உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. **9.** வெற்றி பெறும் ஏலதாரர் விற்பனைத் தொகையில் 25%-ஐ (டேவணித்தொகை உட்பட) விற்பனை முடிந்த உடன் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு முன்னதாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து **15 நாள்களுக்குள்** செலுத்தப்பட வேண்டும். தவறினால் முதலில் செலுத்தப்பட்ட 25% தொகை பறிமுதல் செய்யப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இது திருப்பித் தரப்படமாட்டாது. ஒருவேளை வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே குறிப்பிட்டபடி மொத்த விற்பனைத் தொகையின் 25%-ஐச் செலுத்தத் தவறினால், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு விற்பனையை உறுதி செய்ய முடிவெடுக்கப்படும். **10.** இங்கே குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் விற்பனை விலை முழுமையாகப் பெறப்பட்ட பின்னரே விற்பனைச் சான்றிதழானது வெற்றி பெற்ற வாங்குநரின் பெயரில் அதிகாரப்பூர்வ அலுவலரால் வழங்கப்படும். **11.** பெயர் மாற்றத்துக்காகச் சட்டப்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் முதலான கட்டணங்கள் வெற்றி பெறும் வாங்குநரையே சாரும். **12.** சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைகளான (சட்டப்படியான வீட்டு வரி, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) வருமான வரி பிடித்தம் (TDS), சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஏதேனும் அரசுக்கு, அரசின் கீழான அமைப்புகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டியிருந்தால் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரரே செலுத்த வேண்டும். **13.** எந்தக் காரணமும் சொல்லாமல், ஏலப்புள்ளியையோ ஒப்பந்தப்புள்ளியையோ எந்த ஒரு விலைகோரலையுமோ அனைத்து விலைகோரல்களையுமோ ஏற்க அல்லது தள்ளுபடி செய்ய அல்லது ஏலத்தைத் தள்ளி வைக்க / ஒத்தி வைக்க / ரத்துச் செய்யவும் , எந்தக் காரணமும் சொல்லாமல் விற்பனையின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மாற்றவும் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

தேதி : 26.08.2026, இடம் : திருச்சி **ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட்**

राष्ट्रीय सिद्धा संस्थान / NATIONAL INSTITUTE OF SIDDHA

आयुष मंत्रालय / Ministry of Ayush भारत सरकार / Government of India
ताम्बरम सनटोरियम / Tambaram Sanatorium चेन्नई / Chennai - 600 047.
फ़ोन / Tele : 044-22411611 ईमेल / Email: director.nis-tn@gov.in / chennai-nis@gov.in
वेब / Website: https://nischennai.org

संख्या / No.NIS/1-1/Recruitment-Contract/2026 Vol.3
तारीख / Date : 27.08.2026

EMPLOYMENT NOTIFICATION NO: 07/2026

Applications are invited from the eligible candidates for filling up the following posts on contract basis / part time basis at National Institute of Siddha, Chennai

S. No.	Name of the Post	Total No. of Post	UR	OBC	SC	ST	EWS
1	**Professor** (Siddha) - (Integrative Health and Translational Research - IHTR)	01 Post	1	-	-	-	-
2	**Associate Professor** - (Gunapadam Marunthiyal)	01 Post	1	-	-	-	-
3	**Associate Professor** - Udal Koorugal (Anatomy)	01 Post	1	-	-	-	-
4	**Associate Professor** - (Noi Naadal Noi Mudhal Naadal)	01 Post	-	1	-	-	-
5	**Associate Professor** - (Sattam Saarntha Maruthuvamum Nanju Maruthuvamum)	01 Post	1	-	-	-	-
6	**Associate Professor** (Maruthuvam)	01 Post	-	-	-	-	1
7	**Associate Professor** (Varmam, Pura maruthuvam and Sirappu Maruthuvam)	01 Post	1	-	-	-	-
8	**Associate Professor** (Aruvai including Kan, Kathu, Mookku, Thondai, Pal and Thol Maruthuvam)	01 Post	-	1	-	-	-
9	**Associate Professor** (Sool and Magalir Maruthuvam)	01 Post	1	-	-	-	-
10	**Associate Professor** (Kuzhanthai Maruthuvam)	01 Post	-	-	-	1	-
11	**Assistant Professor** (Udal Koorugal)	01 Post	-	1	-	-	-
12	**Assistant Professor** (Udal Thathuvam)	01 Post	1	-	-	-	-
13	**Assistant Professor** (Gunapadam Marunthiyal)	01 Post	-	-	-	-	1
14	**Assistant Professor** (Gunapadam Marunthakaviyal)	01 Post	1	-	-	-	-
15	**Assistant Professor**(Noi Naadal Noi Mudhal Naadal)	01 Post	-	1	-	-	-
16	**Assistant Professor** (Sattam Saarntha Maruthuvamum Nanju Maruthuvamum)	01 Post	1	-	-	-	-
17	**Assistant Professor** (Maruthuvam)	01 Post	-	-	-	1	-
18	**Assistant Professor** (Varmam, Pura maruthuvam and Sirappu Maruthuvam)	01 Post	-	-	1	-	-
19	**Assistant Professor** (Aruvai including Kan, Kathu, Mookku, Thondai, Pal and Thol Maruthuvam)	01 Post	-	1	-	-	-
20	**Assistant Professor** (Sool and Magalir Maruthuvam)	01 Post	1	-	-	-	-
21	**Assistant Professor** (Kuzhanthai Maruthuvam)	01 Post	1	-	-	-	-
22	**Assistant Professor** (Varmam, Pura maruthuvam and Sirappu Maruthuvam)	01 Post	-	1	-	-	-
23	**Assistant Professor** (Pura Maruthuvam)	01 Post	-	-	1	-	-
24	**Assistant Professor** (Public Health)	01 Post	1	-	-	-	-
25	**Assistant Professor** (Pharmacology)	01 Post	1	-	-	-	-
26	**Assistant Professor** (Botany / Pharmacognosy)	01 Post	1	-	-	-	-
27	**Emergency Medical** Officer (1) / Medical Officer (1)	2 Posts	-	-	-	-	02

Consultant – 02 posts
1. Project Consultant (Civil) – 01 Post
2.Consultant (Senior Research Officer – Stat) 01 Post

Part Time – 02 posts
1. Surgical Specialist – 01 post
2. Traditional Bone Setter – 01 post

Consultant (Full time or Part time) – 01 Post
1. Medical Oncologist – 01 Post

Note : For detailed information regarding the above posts, educational qualifications, age, experience, and general conditions, candidates are requested to visit the **"NOTIFICATIONS"** section of the Institute website **(https://nischennai.org)**. Any updates or modifications regarding this recruitment will be posted only on the Institute website.

Sd/-
Director